# கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து, உன் கால் சிக்கிக் கொள்ளாதபடி காப்பார். நீதி 3 : 26

சிக்கிக்கொள்வோமா, என்று பயந்து நடுங்கிக் கொண்டிருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே, முதியோர்களே, வாலிபர்களே, குழந்தைச் செல்வங்களே,

தேவனுடைய வாக்குத்தத்தம் உங்களுக்காகவே கடந்து வருகிறது. விசுவாசிக்கிற நீங்கள் பாக்கியவான்கள். வேத வசனத்தை அப்படியே நம்புங்கள். உன் நம்பிக்கை வீண் போகாது.

**கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து, உன் கால் சிக்கிக் கொள்ளாதபடி காப்பார்.**

மேற்கண்ட வசனத்தை உங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்ளுங்கள். இந்த மாதம் முழுவதும் கீழ்க்கண்டவாறு வசனத்தை திரும்ப, திரும்பச் சொல்லுங்கள்.

**கர்த்தர், என் நம்பிக்கையாயிருந்து என் கால், சிக்கிக் கொள்ளாதபடி காப்பார்.–என்பதாக.**

என் அன்பு சகோதரனே, சகோதரியே,

உங்கள் விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.

உங்கள் இருதயம் எப்பொழுதும் கர்த்தருடைய வசனத்தினால் நிறைந்திருக்கட்டும். வசனத்திற்கு எப்பொழுதும் முதலிடம் கொடுங்கள். வேதத்தை அடிக்கடி வாசியுங்கள். தியானியுங்கள்.

**நீதி. 28 : 9 சொல்கிறது,**

**வேதத்தை கேளாதபடி, தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது–என்பதாக.**

“**ஜெபமே ஜெயம்**” – என்று நாம் விசுவாசித்தாலும், வேதத்திற்கு அதைவிட முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். வேதத்தின் ஒவ்வொரு வசனமும் மிக முக்கியமானது.

1991 வருடத்தில் ஒரு தனிப்பட்ட நபருக்கு ஒரு உதவி தேவைப்பட்டது. யாரும் உதவி செய்ய, முன்வராத படியால் நான் பொறுப்பெடுத்துக் கொண்டேன். ஆனால் பூட்டான் சென்று வரவேண்டும்; பிரயாணம் மட்டும் போக வர 14 நாட்கள். குளிர் தேசம் உத்தேசமாக 6 இடத்தில் போகும்பொழுது மட்டும் ரயில்,பஸ் மாற வேண்டும். வரும்பொழுது 7 பெட்டிகள் பூட்டானிலிருந்து எடுத்துக் கொண்டு இவ்வாறாக 6 இடத்தில் மாற வேண்டும். இது போக என்னுடைய பெட்டி உண்டு. மொழிப்பிரச்சனை வேறு. சில இடங்களில் லாட்ஜ்களில் தங்க வேண்டும். ரிக்ஷா, ஆட்டோ மூலம் சில இடங்களில் கடந்து செல்ல வேண்டும்.

இவைகளையெல்லாம் நினைத்த பொழுது, எனக்கு மிகவும் சோர்வாக இருந்தது. 14 நாட்கள், பாதை தெரியாத இடம், குளிர்பிரதேசம், 2800 மைல் பிரயாணம், எங்கு பார்த்தாலும் லஞ்சம் – இத்தனையும் சமாளித்து, 7 பெட்டிகளை உடையாமல் தொலையாமல் வ.உ.சி மாவட்டத்திற்கு கொண்டு வரவேண்டும்.

ஒருநாள் இவைகளை நினைத்து மிகவும் சோர்வோடு கட்டிலில் படுத்திருந்தேன். அப்பொழுது, என்னுடைய கட்டிலிலே “அன்றன்றுள்ள அப்பம் ”– என்ற புத்தகம் கிடந்தது. அதை எடுத்து, திறந்தேன். ஒரு பக்கத்தலுள்ள தலைப்பு என் கண்ணில் பட்டது.

“**கர்த்தர் நித்தமும் நடத்துவார்.**”

என்பதாக. இந்த மூன்று வார்த்தைகளும் என்னை தைரியபபடுத்தியது.

1992 மார்ச் 18ம் தேதியிலிருந்து T.V.G.M. தலைமை அலுவலகத்தில் தினமும் காலை வேளை தொடர்ச்சியா 14 நாள் ஆபீஸ் அலுவலர்கள் யாவரும் உபவாசித்து எனக்காகவும், பல குறிப்புகளுக்காகவும் ஜெபிக்க ஏற்பாடு செய்தேன். வெற்றியோடு மார்ச் 31 பிரயாணத்தை முடித்தேன். என் இருதயத்திலும் வாயிலும் விசுவாச அறிக்கை. கர்த்தர் நித்தமும் நடத்துவார் –என்பதாகும். ஆம், கர்த்தர் நித்தமும் நடத்தினார்.

**உன் பக்கத்தில் ஆயிரம் பேரும், உன் வலதுபக்கத்தில்**
**பதினாயிரம் பேரும் விழுந்தாலும், உன்னை அணுகாது.**
**உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி**
**உனக்காக தம்முடைய துாதர்களுக்கு கட்டளையிடுவார்.**

மேற்கண்ட வசனங்களையே சொல்லி ஜெபித்தேன். ஜெயம் கண்டேன்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே,

**கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து, உன் கால் சிக்கிக் கொள்ளாதபடி காப்பார்**

இந்த வசனத்தை அறிக்கையிடுங்கள். ஜெயத்தைக் காணுங்கள். சாட்சி எழுதுங்கள். ஆமென்.